Registered as a Newspaper


# உதயன்

சுடர் : 36 கதிர் : 330 | புதன்கிழமை | ஐப்பசி 10 ஆம் நாள் 27 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## கொரோனாவால் மூடப்பட்டது செயலகப் பிரிவு

வவுனியா, ஒக். 27
வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் திட்ட மிடல் கிளை கொரோனா அச்சு 12 >

## வீட்டுக்குச் செல்லட்டும் அரசு இல்லையேல் நாட்டுக்கு பேரழிவு!



### மக்களை எச்சரிக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஒக்ரோபர் 27
அரசு தோல்வியடைந்ததை அரசில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளே கூறத் தொடங்கியுள்ளனர். தற்போதைய நிலையில் அரசுக்குள் நெருக்கடி அதிகரித்துள்ளது. எனவே, இந்த அரசை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இல்லையேல் நாட்டுக்குத்தான் பேரழிவு." 15 >

## முதலாம் திகதி பல்கலைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 27
பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை மீண்டும் நவம்பர் மாதம் முதலாம் 15 >

## பிரதேசசபை உறுப்பினர் உயிரிழப்பு



வவுனியா, ஒக். 27
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உபதவிசாளர் சுகவீனம் காரணமாக 15 >

## கல்லெறி வாங்கும் நிலையில் அரசு!

### ஹேஷா விதானகே எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 27
"இந்த அரசை கல்லெறிந்து விரட்டியடிக்கும் நிலையிலேயே நாட்டு மக்கள் உள்ளனர். இப்படியானதொரு அரசில் நானும், சமீந்த விஜேசிறியும் 15 >



"அப்ப படகில சவாரி செய்து படம் காட்டினதெல்லாம் அவருக்கே ஆப்பா மாறிட்டு போல..."

## வடக்கு மாகாணத்துக்கு 253 புதிய மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், ஒக். 27
வடக்கு மாகாணத்துக்கு 253 மருத்துவர்கள் புதிதாக நியமிக்கப்பட் டுள்ளனர். இதில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ 15 >

## யார் செய்தாலும் தவறுதான்!

### கொழும்பில் மீண்டும் ஒன்றுகூடிய பங்காளிகள் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 27
"ஐக்கிய தேசியக் கட்சி செய்யும்போது 'தவறாக' இருந்த ஒரு விடயம் நாம் செய்யும்போது சரியாகி விடாது. யார் செய்தாலும் தவறுதவறுதான்"- என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனதலைமையிலான அரசுக்கு ஆத 15 >

## சுன்னாகம் தபால் நிலைய விவகாரம்: தவறிழைத்தோரை தண்டிக்க ஜனாதிபதியிடமும் செல்வேன்!

### சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27
சுன்னாகம் தபால் நிலையக் கட்டடம் மற்றும் தபால் அதிபர் ஓய்வு விடுதி என்பனவற்றை முழுமைப்படுத்தி, மக்களுக்கு உடனடியாக கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதே 15 >



## சுமந்திரனுக்கு எதிராக மீனவர்கள் போராட்டம்

### கொடும்பாவியும் எரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27
உள்ளூர் இழுவைப் படகுகள் தொழிலில் ஈடுபடுவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கு 15 >

## இழுவைமடித் தொழிலை சட்டத்தால் தடுக்கட்டும்!

### வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர்கள் சுமந்திரன் எம்.பிக்கு சவால்

யாழ்ப்பாணம், ஒக். 27
இழுவைமடித் தொழிலை நிறுத்த வேண்டுமென்று கூறும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அந்நிய நாட்டு மீனவர்கள் எங்கள் வளங்களை சுரண்டிக்கொண்டு செல்கின்றமையை முதலில் தடுத்து நிறுத்திக் காட்டட்டும்.
இழுவைமடித் தொழிலுக்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டு அந்தச் சட்டத்தின் மூலம் தடுக்கலாம் என்று நினைக் 15 >

## அங்கஜன் எம்.பி. புதிய கட்சி?

யாழ்ப்பாணம், ஒக். 27
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன், தனது தந்தையாரான சதாசிவம் இராமநாதனின் பெயரில் இலங்கைத் தமிழர் சுதந்திர முன்னணி 12 >



# முழங்காவில் ஏ-32 வீதியில் ஆசிரியர்கள் போராட்டம்



வன்னேரிக்குளம், ஒக். 27

கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலயம் முன்பாக ஏ-32 வீதியில் ஆசிரியர்கள் தொழிற் சங்கப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் போராட்டத்தில் மழைக்கு மத்தியிலும் பெருமளவு ஆசிரியர்கள் பங்குபற்றினர்.

இலங்கை முழுவதும் ஆசிரியர்களால் நடத்தப்படுகின்ற போராட்டத்தின் தொடர்ச்சியாகவே முழங்காவிலிலும் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (து-13)

## மூத்த பொலிஸ் அதிகாரி சிவிலியன் மீது தாக்குதல்

### சமூக வலைத்தளங்களில் வைரலாகும் காணொலி

கொழும்பு, ஒக்.27

மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரன்மல் கொடித்துவக்கு, சிவிலியன் ஒருவரைத் தாக்கும் காணொலி ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

இரத்தினபுரி, கிரியெல்ல வீதியில் இந்தச் சம்பவம் நடந்தது என்று கூறப்படும் நிலையில், இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கடந்த வாரம் ஏறாவூரில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சிவிலியன் ஒருவரைத் தாக்கும் காணொலி வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது சிவிலியன் தாக்கப்படும் புதிய காணொலி ஒன்று வெளியாகியுள்ளது. (எ-இ)

## கர்ப்பிணிகளுக்கு பால்மா இன்று முதல் விநியோகம்

### கூட்டுறவு ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

வடக்கிலுள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த கர்ப்பிணிகளுக்கு முன்னைய விலையில் தலா 2 பால்மா பைக்கற்றுக்கள் இன்று வழங்கப்படவுள்ளன. மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அவற்றை இன்று புதன்கிழமை முதல் பெற்றுக்கொள்ளலாம் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, அங்கர் மற்றும் ரத்தி (400 கிராம்) பால்மா பைக்கற்றுக்களே வழங்கப்படவுள்ளன.

அதன்படி, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 7 ஆயிரத்து 272 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 100 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயித்து 300 பேருக்கும், வவுனியாவில் 2 ஆயிரத்து 230 பேருக்கும், மன்னாரில் ஆயிரத்து 715 பேருக்கும் வழங்கப்படவுள்ளன. (து)

## எரிபொருளுக்கு தட்டுப்பாடில்லை!

கொழும்பு, ஒக். 27

இலங்கையில் தற்போது எரிபொருளுக்குப் பற்றாக்குறை இல்லை எனவும், எதிர்காலத்திலும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாது எனவும் அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டில் 8 மாதங்களுக்குத் தேவையான பெற்றோல் மற்றும் டீசலை சிங்கப்பூரில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை 8 மாதங்களுக்குத் தேவையான பெற்றோல் மற்றும் டீசலுக்கான ஒப்பந்தம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் உதய கம்மன்பில சமர்ப்பித்தார். அந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கமைய, சிங்கப்பூரின் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது" - என்றார். (து-22)

## நிராகரிக்கப்பட்ட உரம் மீள் பரிசோதனைக்கு

கொழும்பு, ஒக். 27

இலங்கையால் நிராகரிக்கப்பட்ட சீன கரிம உரத்தை மீண்டும் பரிசோதிக்க, இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிறுவனத்துக்கு மாதிரிகளை அனுப்புவதற்கு இலங்கை இணங்கியுள்ளது என இராஜாங்க அமைச்சர் ஷஷீந்திர ராஜபக்ச தெரிவித்தார்.

ஆய்வகங்கள் அங்கீகாரம் பெறாததால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் சோதனைகளை ஏற்க முடியாது என்று சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அந்த உரத்தைக் கொண்டுவர முடியாது என்பதை நாங்கள் தெளிவாக்கினோம். மேலும் 16 நாடுகளுக்கு சீன நிறுவனத்தால் அனுப்பப்படும் உரத்தின் தரத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறினர் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (து-இ)




## சட்டவிரோத மீன்பிடி முறையை தடை செய்யுமாறு சுவரொட்டி!

முல்லைத்தீவு, ஒக்.27


சட்டவிரோத மீன்பிடிமுறைகளைத் தடை செய்ய வேண்டும் என்றும் - சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் - முல்லைத்தீவின் பல பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தால் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மீனவ கட்டளைச் சட்டங்களில் தடைக்குட்படுத்தப்பட்ட மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கு உள்ளான மீன்பிடிமுறைகள் மீனவ மற்றும் இயற்கை வளங்களுக்கு அழிவை ஏற்படுத்தக்கூடியன என்பது உங்களுக்குத் தெரியுமா? இருப்பினும் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா?.

1996 இலக்கம் 2 சட்டத்தின்படி தற்போது இருக்கும் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுப்போம், மீனவ கொள்கை ஒன்றை வகுத்து அதை நடைமுறைப்படுத்தி நீரியல் வளங்களைப் பாதுகாப்போம் - என்று அந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-19)

## கைக்குண்டுகள் மீட்பு

வவுனியா,ஒக்.27



வவுனியா, ஓமந்தை - சிதம்பரநகர் பகுதியில் உள்ள தோட்டக்காணியில் இருந்து இரண்டு கைக்குண்டுகளை பொலிஸார் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

குறித்த காணியை அதன் உரிமையாளர் உழவு இயந்திரம் மூலம் பண்படுத்தியபோது நிலத்தில் புதையுண்ட நிலையில் இரு கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த விடயம் தொடர்பாக மாமடு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரும், சிறப்பு அதிரடிப்படையினரும் நீதிமன்றின் அனுமதியைப் பெற்று குறித்த குண்டுகளை செயலிழக்கச் செய்தனர். (ஐ-110)

## கோடாரி வெட்டில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 27

குடும்பத் தகராறு காரணமாக, மைத்துனர் ஒருவர் கோடாரியால் கொத்தியதில் இருவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயரப்புலம் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்றது.

இதில், 18, 30 வயதான இருவரே காயமடைந்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-10,27,125)

## கைதடியில் நாளை உரவிநியோகம்

சாவகச்சேரி, ஒக். 27

தென்மராட்சிதெற்கு கோவிலாக்கண்டி கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் நாளை வியாழக்கிழமை இலவச மானிய உர விநியோகம் நடைபெறும்.

குறித்த அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகள் 2020 ஆம் ஆண்டுக்கு ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டு, மானிய உர பற்றுச்சீட்டு அல்லது காணியின் ஆவணம் ஆகியவற்றைக் கொண்டுசெல்லுமாறு அமைப்பின் செயலாளர் புஷ்பாகரன் அறிவித்துள்ளார். (து-9)


## சகல கிறிஸ்தவ எம்.பிக்களையும் பேச்சுக்கு அழைத்தார் கர்தினால்

கொழும்பு, ஒக். 27

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ உறுப்பினர்களையும் சந்திப்பதற்காக அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பேராயர் இல்லத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை மற்றும் பல விடயங்கள் தொடர்பில் இதன் போது பேசப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-22)

# 7 ஏக்கர் காணியை விடுவிக்க இராணுவத்தினர் இணக்கம்!



**முல்லைத்தீவு, ஒக்.27**

**முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் இராணுவத்தின் வசமிருந்த 7 ஏக்கர் காணிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந் தெரிவித்தார்.**

இராணுவத்தினரால் கையளிக்கப்படும் காணிகள் அரச அதிகாரிகளால் பொறுப்பேற்கப்பட்டு பின்னர் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள சுமார் 19 ஏக்கர் காணிகள் போரின் பின்னர் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்தது. இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்த அந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி 2017ஆம் ஆண்டு மக்கள் போராட்டம் நடத்தினர். அப்போது ஒரு தொகுதிக் காணிகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டன. ஏனைய காணிகள் ஆறுமாத காலப் பகுதிக்குள் விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது.

எனினும் தொடர்ந்தும் அந்தக் காணிகள் இராணுவத்தினரின் வசம் இருந்த நிலையில், தற்போது விடுவிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-19)

## வெடிமருந்துடன் கைதானவருக்கு 72 மணிநேர தடுப்புக்காவல்

முல்லைத்தீவு, ஒக்.27

வெடிமருந்து மற்றும் கசிப்புடன் முல்லைத்தீவுநகர்ப் பகுதியில் கைது செய்யப்பட்டவரை 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 24ஆம் திகதி மாலை முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் சுற்றுக் காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் வெடிமருந்து மற்றும் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரத்தைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். அவரிடம் 200 கிராம் வெடிமருந்து, ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள அனுதிக்க வேண்டும் என்று பொலிஸார் நீதிமன்றில் கோரினர். வழக்கை விசாரித்த நீதிமன்றம் சந்தேகநபரை 72 மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள அனுமதி வழங்கியது. (எ-19)

## சனிக்கிழமைகளிலும் பாடசாலைகள் இயங்கும்

கொழும்பு, ஒக்.27

பிரதி சனிக்கிழமைகளிலும் பாடசாலைகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக பாடசாலைகள் காலம் தாழ்த்தி ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இந்தக் கல்வியாண்டுக்குள் உரிய பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்கான விசேட திட்டங்களை கல்வி அமைச்சு வகுத்துள்ளது. அதற்கமைவாக மாற்று வழிகளைப் பயன்படுத்தி விடுபட்ட பாடங்களைக் கற்றுக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் விடுபட்ட பாடங்களைக் கற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார். (ஒ-4)

## பதவிகளை உதறிய ஐ.ம.ச. எம்.பிக்கள்!

### அரசுடன் இணையும் திட்டம்?

கொழும்பு, ஒக்.27

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், தங்களது தொகுதி அமைப்பாளர் பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே ஆகிய இருவருமே தங்களின் தொகுதி அமைப்பாளர் பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

இது தொடர்பில் கட்சியின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.


இதேவேளை எதிர்வரும் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது இவர்கள் இருவரும் அரசுடன் இணைந்து கொள்வார்கள் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (எ-இ)

## முல்லேரியாவில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் சாவு மற்றொருவர் காயம்

முல்லேரியா, கொட்டிகாவத்தையில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 42 வயதுடையவர் எனவும் காயமடைந்தவர் 45 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். காயமடைந்த நபர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை நுகேகொட குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் முல்லேரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4)



## புதினம் தெரியுமோ?

ஆட்சி மாற்றத்தோட நிறைய மாற்றங்களும் நடந்ததுதானே. வேதமானவர் நிர்வாகம் நடத்தின இடத்துக்கு புலிகேசியார் வந்தவர் தானே. வந்ததில இருந்து ஒரே பெட்டிசம் தானாம் அதுதான் ஊருக்க சொல்லுற மாதிரி மொட்டைக் கடதாசி போட்டுக் கொண்டிருந்தவை. வேதமானவருக்கு எதிராயும் அவரோட சேர்ந்து வேலை செய்த ஆக்களுக்கு எதிராயும் பெட்டிசம் போடுப்பட்டது. கன இடங்களுக்கு இவை தொடர்ச்சியாய் நிறைய விசயங்களை பெட்டிசமாய் அனுப்பினவை. அதில ஒண்டிரண்டை விசாரிச்சிட்டு, இவையின்ர காழ்ப்புணர்வு எண்டும், கனவு பாழாப்போன எம்.பி. கைங்கரியம்தான் இந்தப் பெட்டிசம் எண்டும் தெரிய வந்தவுடன, யாழ்ப்பாணத்தில இருந்து அனுப்பிற பெட்டிசங்களை, அமைச்சர் மட்டத்தில கணக்கெடுக்காமலே விட்டுட்டாங்கள்.

அதால கொஞ்சக் காலம் இந்தப் பெட்டிசம் அடிக்கிற விளையாட்டு இல்லாம இருந்தது. இப்ப என்ன நடந்திச்சோ தெரியாது! திடீரென்று திருப்பி அந்த பெட்டிச விளையாட்டுத் தொடங்கிட்டு. திறமையான - நேர்மையான அதிகாரிகள் கொஞ்சப்பேரின்ர பெயரைப் போட்டு இவைதான், தங்கட வண்டவாளங்களைப்பற்றி வாற பேஸ்புக் பக்கம் நடத்துகினம் எண்டும், அரச அதிகாரிகளா இருந்து கொண்டு -அரசுக்கு எதிராகச் செயற்படுகினம் எண்டும் போட்டிருக்கினம்.

இதில ஹைலைட்டா ஒரு விசயம் இருக்கு. 'இவைக்கு வெளிநாட்டில இருக்கிறாக்களோட தொடர்பாம்.

அவையிட்ட காசு வாங்கி இங்க சனத்துக்கு கொடுக்கிறவையாம். வெளிநாட்டில இருக்கிறவை அரசுக்கு எதிரான குறூப்பாம் 'எண்டும் மொட்டைக் கடுதாசி போட்டிருக்கினம்.

இதெல்லாம் போட்டு பெட்டிசத்தை வழமை மாதிரி அமைச்சுக்களுக்கு அனுப்பிட்டு இந்தமுறை புதுசா ஒரு வேலை செய்திருக்கினம்.

என்னெண்டா, ரி.ஐ.டிக்கும் அதின்ர கொப்பி போட்டிருக்கினம். அவை ஏன் அங்க போட்டவை எண்டு உங்களுக்கு விளங்கும்தானே? வெளிநாட்டில இருக்கிறவன் எல்லாம் புலி. அவையளோட இவை தொடர்பு எண்டு கோத்து விட்டிருக்கினம். ஆனா, இந்தப் பெட்டிசங்கள் எல்லாத்தையும் பார்த்த மேல்மட்டங்கள், இது அவையின்ர (கனவு பாழப்போன எம்.பி யின்ட ஆக்கள்) வேலைதானே எண்டு சிரிச்சுப்போட்டு இருக்கிறாங்களாம்.

புலிகேசியாருக்கு இதெல்லாம் தேவையா...?



- பட்சி

# ரயிலில் பயணிக்க 'சீசன்' நடைமுறைக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.27

**பருவகால அட்டை (சீசன்) உள்ளவர்கள் மாத்திரமே ரயிலில் பயணிக்க முடியும் என்ற அரசின் தீர்மானத்துக்கு ரயில் நிலைய அதிபர் சங்கம் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. இதற்கு உரிய தீர்வை முன்வைக்காவிட்டால் பயணிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என்றும் அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் அதன் தலைவர் சுமேத சோமரத்ன தேரர் தெரிவிக்கையில்;

கொரோனாத் தாக்கம் குறைவடைந்ததைத் தொடர்ந்து, ரயில் சேவைகள் மாகாண எல்லைக்குள் மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளன.

இதன்போது பயணிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் வகுக்கப்படவில்லை.


ரயில் பருவகால அட்டை உள்ளவர்களுக்கு மாத்திரம் ரயில் சேவையைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் பருவகால அட்டையில்லாதவர்கள் அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக் கொள்ள பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஆசன ஒதுக்கல் முறைமை ஊடாகப் பயணிகள் ரயில் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்குமாறு, ரயில் திணைக்களத்துக்குப் பல முறை ஆலோசனை வழங்கியுள்ளோம்.

பருவகால அட்டை உள்ளவர்கள் மாத்திரம் ரயில் சேவையைப் பயன்படுத்துவதால் ரயில் திணைக்களம் இலாபமடைந்து விடாது.

இதனால் ஏற்கனவே நஷ்டத்தில் இயங்கும் ரயில்வே திணைக்களம் மேலும் நஷ்டமடைய நேரிடும்.

அனைத்துப் பயணிகளும் ரயில் சேவையைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அதற்கான சிறந்த திட்டங்களை ரயில்வே திணைக்களம் செயற்படுத்த வேண்டும். -என்றார். (ஒ-4-22)



## எறிகணைகள் மீட்பு

கிளிநொச்சி, ஒக்.27

மண்ணில் புதையுண்ட நிலையில் இரு எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரச காணியொன்றில் இருந்தே எறிகணைகள் மீட்கப்பட்டன. இது தொடர்பில் மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து நீதிமன்ற அனுமதியுடன் அவற்றை செயலிழக்கச் செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-113)



## 'ஆகாரமே ஆதாரம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.27

சித்த வைத்தியர் தி. சுதர்மனின் "ஆகாரமே ஆதாரம்" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சித்த வைத்தியர் அ. அரவிந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாண கல்வியற் கல்லூரி துணைப்பீடாதிபதி கலாநிதி பா. தனபாலன் வாழ்த்துரை வழங்கினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, சித்த வைத்தியத்துறை முதுநிலை விரிவுரையாளர் சே. சிவசண்முகராஜா வெளியீட்டு உரையை நிகழ்த்தி, நூலை வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை இளைப்பாறிய அதிபர் கவிமணி க. ஆனந்தராஜா பெற்றுக்கொண்டார்.

நூல் தொடர்பான ஆய்வுரைகளை சித்த வைத்தியர் சோ. கனகசுந்தரம் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி ப.நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். (ஐ)

## மன்னாரில் பெரும் போகத்துக்கான முதலாவது நீர் விநியோகம் ஆரம்பம்

மன்னார், ஒக்.27

மன்னார் மாவட்டத்தில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான பெரும்போக பயிர்ச்செய்கைக்கான முதலாவது நீர் விநியோகம் நேற்று வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

மாவட்டத்தில் பெரும் போகத்துக்காக 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நிலையில் முருங்கன் கட்டுக்கரைக்குளம் 11 ஆம் கட்டை துருசு பகுதியில் சர்வ மத தலைவர்களின் ஆசியுடன் நடைபெற்ற நிகழ்வைத் தொடர்ந்து நீர் திறந்து விடப்பட்டது.

இதன்போது மன்னார் மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் என். யோகராஜா, முருங்கன் கட்டுக்கரைக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பி.அருள்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். தற்போது கட்டுக்கரை குளத்தில் 9 அடி மட்டத்தில் நீர் காணப்படுகின்றது.



இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய முதலாவது நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (ஐ-56)

## அடுத்த ஆண்டில் டிஜிட்டல் அ.அட்டை

கொழும்பு, ஒக்.27

அடுத்த ஆண்டுமுதல் டிஜிட்டல் தேசிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

லங்கா கியூ ஆர் நெட்வேர்க்கை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ள தாவது;

உலகின் மிக உயர்ந்த தொழில்நுட்பம் கொண்ட தேசிய அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படும். உலகளாவிய மற்றும் டிஜிட்டல் பொருளாதார நிலப்பரப்பில் போட்டித்தன்மையுடன் இருக்க புதிய டிஜிட்டல் பொருளாதாரக் கருவிகளை இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும். லங்கா கியூ ஆர் நாட்டின் டிஜிட்டல் பரிவர்த்தனை நிலப்பரப்பில் புரட்சியை ஏற்படுத்தும் என்று தெரிவித்தார். (எ-இ)

## காரைநகர் தவிசாளருக்கு வலி.மேற்கு சபை அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 27

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் விஜயதர்மா கேதீஸ்வரதாஸ் அண்மையில் உடல்நலக்குறைவால் காலமான நிலையில், அவருக்கு வலி. மேற்கு பிரதேச சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் உறுப்பினர் ஜீவன் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஏகமனதாக அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-319)

# சாவ. மருத்துவமனைக்கு வந்துசேர்ந்தது மின்தூக்கி

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சத்திரசிகிச்சைப் பிரிவுக் கட்டடத்துக்கான மின்தூக்கி உபகரணங்கள் சுகாதாரத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்தும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி மருத்துவமனையில் விபத்து மற்றும் சத்திரசிகிச்சைக் கூடம் அமைக்க 2015ஆம் ஆண்டு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு, வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டு, 2018ஆம் ஆண்டு சத்திர சிகிச்சைக்கூடம் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டுமானப் பணிகள் 2017ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டபோதும், மின்தூக்கி மற்றும் மருத்துவ உபகரணங்கள் கிடைக்காததால் சத்திர சிகிச்சைக் கூடம் இயங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மின்தூக்கி மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான 40 மில்லியன் ரூபா தேவைப்பட்ட நிலையில், மாகாண சுகாதாரத் திணைக்களம் அந்த நிதியை வழங்கவில்லை.

அதையடுத்து தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களின் உதவியை நாடியிருந்தனர். கடந்த ஆண்டு பிரதேசத்தைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர், தனது பிறந்தநாளை முன்னிட்டு புலம்பெயர் நாடுகளில் உள்ள தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மூலம் நிதியைத் திரட்டி, மருத்துவமனை நிர்வாகத்திடம் வழங்கியிருந்தார்.

இதையடுத்து மின்தூக்கி மற்றும் உபகரணங்கள் மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ளன. மின்தூக்கி பொருத்தப்பட்ட பின்னர் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கான உபகரணங்கள் வந்ததும், சிகிச்சைப் பிரிவு இயங்க ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கு அஞ்சாதீர்கள்!

## பெற்றோரிடம் சுகாதாரத்தரப்பு கோரிக்கை




**கொழும்பு, ஒக். 27**

**பாடசாலைகளில் சுகாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், பெற்றோர் எந்தவித அச்சமுமின்றி மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பலாம் என்று சுகாதாரத் தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

சிறப்பு மருத்துவர் தீபால் பெரேரா இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

'மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதில் சிறிதேனும் அச்சம்கொள்ளத் தேவையில்லை. தற்போதைய நிலையில் எமது பிள்ளைகள், முகக்கவசம் அணிவதற்குப் பழக்கப்பட்டுத்தப்பட்டுள்ளனர். விசேடமாக இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள்கூட முகக்கவசம் அணிவதற்குப் பழக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகளில் உணவு உண்பதற்கு சிறுவர்களைப் பழக்கப்படுத்த வேண்டாம். பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்கு வெளியில், எவ்வாறான சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டும் என்று சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்.

நாடளாவிய ரீதியில் உள்ள சகல அரச பாடசாலைகளிலும் ஆரம்ப வகுப்புகள், சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நேற்று ஆரம்பமாகியுள்ளன. கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக பாடசாலைகளில் கிருமி தொற்றுநீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன'- என்றார். (ம-22)



## எரிபொருள் பிரச்சினையெனில் அறிவிக்கலாம்

கொழும்பு,ஒக்.27

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இருப்புக்கள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டாலோ அல்லது எரிபொருளை மறைத்து வைத்தாலோ அது தொடர்பில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்க முடியும்.

அதற்கமைவாக 01154 55130 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மக்கள் தகவல்களைத் தெரிவிக்க முடியும். (ஒ-4)

## வான்வழியாக கண்காணிப்பு: வடக்கு ஆளுநர் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27

வடக்கு மாகாணத்தில் மோசமான தங்குமிடங்களைக் கொண்ட குடியிருப்புப் பகுதிகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக விமானப் படையினரின் உதவியைப் பெற்றுக்கொள்ள வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா திட்டமிட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

வடக்கு மாகாணத்தின் மிக மோசமான குடியிருப்புக்களில் வாழும் மக்கள் தொடர்பில் அவதானிப்பதற்காக வான்வழியாக களப் பயணம் ஒன்றை மேற்கொள்ள ஆளுநர் திட்டமிட்டுள்ளார் என்று ஆளுநர் செயலகத் தகவல்கள் கூறுகின்றன. (எ-20)

## மக்களின் துயர் துடைக்கவே ஆட்சிப்பீடம் ஏறியதாம் அரசு

### திலும் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 27

'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, மக்களின் துயர் துடைக்கவே ஆட்சிப்பீடம் ஏறியது. இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா என்ற கேள்விக்கு ஊடகங்களிடம் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நாளுக்கு நாள் எரிபொருள் விலை அதிகரிக்குமானால் அது பெரும் பிரச்சினையாக மாறிவிடும். டீசலின் விலையை அதிகரித்தால் பஸ் கட்டணங்களை அதிகரிக்க நேரிடும். எரிபொருள் விலையை அதிகரிப்பது அவசியம் என்றாலும் தற்போதைய நிலையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படக்கூடாது.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டால், பஸ் கட்டணங்கள் தொடர்பான பிரச்சினை ஏற்படும். கடந்த காலங்களில் பஸ் கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்று பஸ் உரிமையாளர்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்தனர். எனினும், நாட்டின் தற்போதைய நிலையில், மக்கள் மீது சுமையை இறக்க வேண்டாம் என நாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர்கள் பஸ் கட்டணங்களை அதிகரிக்கவில்லை. ஒட்டுமொத்த நாட்டு மக்களின் துயர் துடைக்கவே நாம் ஆட்சிப்பீடம் ஏறினோம். மக்களின் வயிற்றில் அடிப்பது எமது நோக்கம் அல்ல. எதிரணியினரின் ஆசைகள் நிறைவேற நாம் ஒருபோதும் இடமளியோம்' - என்றார். (ம-22)

## அதிகாரிகள் தாக்க முற்பட்டமையால்தான் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கலவரம்!

கொழும்பு, ஒக். 27

'வெலிக்கடைச் சிறைச்சாலையின் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கைதிகளை 150க்கும் அதிகமான சிறைச்சாலை அதிகாரிகள் இணைந்து தாக்க முற்பட்டுள்ளனர். இதையடுத்தே அங்கு கைதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் கலவரம் வெடித்துள்ளது. இதுதான் உண்மை. அங்கு கைதிகளுக்கிடையில் மோதல் இடம்பெறவில்லை இவ்வாறு சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் செயலாளர் சுதேஸ் நந்திமால் சில்வா தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலை கைதிகளைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

'கடந்த ஒருமாதகாலமாக வெலிக்கடைச் சிறைச்சாலையின் கைதிகள் தமது உரிமையை பெற்றுத்தருமாறு கோரி கூரைகளில் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கொலைக் குற்றச்சாட்டுக்களுக்குள்ளான கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு ஆர்ப்பாட்டம் செய்வதான கருத்தையே சிறைச்சாலைகள் ஆணையாளர் உள்ளிட்ட தரப்பினர் முன்வைக்கின்றனர் .

ஆனால், அது உண்மைக்குப் புறம்பான கருத்தாகும். ஏனெனில் அந்தக் கைதிகளின் கோரிக்கையாக அமைவது அவர்களுக்கு உரிய பொதுமன்னிப்பை வழங்குதலே ஆகும். துமிந்த சில்வாவை விடுதலை செய்ய முடியுமாயின் இவர்களையும் விடுதலைசெய்ய முடியும். 13 வருடங்களுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவித்து வருகின்ற இந்தக் கைதிகளுக்கு அரசு தொடர்ச்சியாக பொய்யான வாக்குறுதிகளையே வழங்கியுள்ளது. இந்நிலையில், கைதிகள் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தருணத்தில் 150 அதிகாரிகள் அவர்களைத் தாக்க முற்பட்டுள்ளனர். அதேபோல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் கைதிகளுக்கு உணவு வழங்கிய கைதிகளை சிறை அதிகாரிகள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளனர். இது சட்டத்துக்கு முரணான செயற்பாடாகும். ஏனெனில் ஆர்ப்பாட்டம்செய்யும் உரிமை அனைத்துத் தரப்பினருக்கும் உள்ளது' - என்றார். (ம-22)



## மூன்றாவது தடவையும் அரிசி விலை அதிகரிப்பு

கொழும்பு,ஒக்.27

நாட்டில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும், மூன்றாவது தடவையாக அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு புறக்கோட்டை அரிசி விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக நாட்டரிசி ஒரு கிலோ கிராம் 15 ரூபாவாலும், சம்பா அரிசி ஒரு கிலோ கிராம் 10 ரூபாவாலும், கீரிச்சம்பா ஒரு கிலோ கிராம் 30 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் 110 ரூபாவுக்கு விற்பனையாகும் கெக்குலு அரிசியின் விலையில் மாற்றம் ஏற்படவில்லை.

தற்போது நாட்டரிசி ஒரு கிலோ கிராம் 130 ரூபாவுக்கும், சம்பா அரிசி ஒரு கிலோ கிராம் 150 ரூபாவுக்கும், கீரிச்சம்பா ஒரு கிலோ கிராம் 195 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. (ஒ-4)

## வெள்ளைச் சீனிக்கு சந்தையில் தட்டுப்பாடு

கொழும்பு,ஒக்.27

அரசால் சீனிக்கு கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளபோதும், வெள்ளைச்சீனிக்கு சந்தைகளில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஒருசில இடங்களில் ஒரு கிலோ வெள்ளைச் சீனி 170 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. வெள்ளைச் சீனி தற்போது களஞ்சியசாலைகளில் இல்லை என்று இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவுக்கும், சீனி இறக்குமதியாளர்களுக்கும் இடையே இன்று விசேட சந்திப்பு இடம்பெறவுள்ளது. (ஒ-4)

### மா ஓயாவில்

## நீராடச் சென்றவர் பரிதாபச் சாவு!

கொழும்பு, ஒக். 27

நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மா ஓயாவில் நீராடச் சென்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று கொச்சிக்கடைப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

அம்பலயாய, கட்டான பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞரே மரணமடைந்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நீர்கொழும்பு மருத்துவமனையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கொச்சிக்கடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-22)

# 30 அரச நிறுவனங்களுக்கு புதிய தலைவர்கள் நியமனம்?

கொழும்பு, ஒக்.27

**சுமார் 30 க்கும் மேற்பட்ட அரச நிறுவனங்களின் தற்போதைய தலைவர்களை நீக்கி, புதிய தலைவர்களை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.**

அதற்கமைவாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, புவியியல் ஆய்வு சுரங்கப் பணியகம் மற்றும் முக்கிய அரச ஊடக நிறுவனம் உள்ளிட்ட 30 நிறுவனங்களில் தலைவர்கள் நீக்கப்படவுள்ளனர். இதேவேளை, மேல் மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி ஜே.எம்.சி.ஜயந்தி விஜேதுங்கவை அந்தப் பதவியிலிருந்து நீக்கி, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவராக நியமிக்க அரசு திட்டமிட்டிருந்தது.

எனினும் விஜேதுங்கவின் இடமாற்றம் குறித்து பொது நிர்வாக அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் விளக்கமளித்துள்ளதால், அவரது இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4)

## 67 நாள்களில் ரயில் திணைக்களத்துக்கு ரூ. 1,116 மில்லியன் நஷ்டம்

கொழும்பு, ஒக்.27

67 நாள்களில் மட்டும் ரயில்வே திணைக்களத்துக்கு ஆயிரத்து 116 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று அதன் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வழமையாக ஒரு நாளில் ரயில்வே திணைக்களத்துக்கு 16 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும். ஒரு மாதத்துக்கான வருமானம் 500 மில்லியன் ரூபாவைத் தாண்டும். எனினும் நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக கடந்த 67 நாள்களாக தற்காலிகமாக ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அதனால் பெருமளவு வருமானம் இழக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மாகாண மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொழில்களுக்குச் செல்வோர் அனுமதிப்பத்திரத்தை உபயோகித்து ரயில்களில் பயணம் செய்ய முடியும். அவர்களுக்காக 130 ரயில் சேவைகள், சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி முன்னெடுக்கப்பட்டுள்ளன. -என்றார். (ஒ-4)

## மாணவர்களிடையே வெளிநாட்டு மோகம்

கொழும்பு, ஒக்.27

உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை எப்போதும் இல்லாதளவு தற்போது அதிகரித்துள்ளது என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் வெளிநாட்டுக் கற்கைக்காக தினசரி விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 350 ஆக காணப்பட்டது.

எனினும் தற்போது அவ்வாறு விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஒ-4)

## பூஸா சிறைச்சாலையில் 21 கைதிகளுக்கு கொரோனா உறுதி

காலி, பூஸா உயர்பாதுகாப்பு சிறைச்சாலையில் 21 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறைச்சாலையில் 30 கைதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 21 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளான கைதிகள், அங்குனுகொல பெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அருகிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (ம-22)



## பயிற்சிப் பட்டறை

சாவகச்சேரி, ஒக்.27

தென்மராட்சிப் பிரதேசத்தில் வதியும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பது தொடர்பிலான பயிற்சிப் பட்டறை நேற்று சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது.

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சின் அனுசரணையுடன் பிரதேச பெண்கள் சிறுவர் அலகினரால் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிப் பட்டறையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த 25 பெண்கள் பங்குபற்றினர்.

நிகழ்வில் வளவாளர்களாக பிரதேச தொழில்முயற்சி அபிவிருத்தி அலுவலர் கி. கருணாகரன் மற்றும் பிரதேச மனிதவள அபிவிருத்தி அலுவலர் சிவதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். (ஐ-9)

## தென்மராட்சி விவசாயிகளுக்கு திண்ம திரவ உரம் வழங்கல்

சாவகச்சேரி, ஒக். 27

தென்மராட்சி பிரதேச விவசாயிகளுக்கு திண்ம திரவ உரம் அந்தந்த கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

கைதடி நாவற்குழி கமக்கார அமைப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் இந்த உரம் வழங்கப்படவுள்ளது.

எனவே குறித்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்த வருட ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு, கடந்த வருடம் மானிய உர வகைகள் பெற்றமைக்கான பற்றுச்சீட்டு அல்லது காணிக்கான உறுதி ஆகியவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## வவுனியா பல்கலைக்கழகத்தில் 600 மரக்கன்றுகள் நடுகை

வவுனியா, ஒக்.27

வவுனியா பல்கலைக்கழகத்தில் 600 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாருதம் பசுமை இயக்கத்தின் 6 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் சரத்சந்திர, வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் நே.விஸ்ணுதாசன்,



மருத்துவர் ப. சத்தியலிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் யோகராசா, பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக வளவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-20)

## நெல்லியடி விபத்தில் குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 27

நெல்லியடி கப்பூதுப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தோனியார் மடத்துக்குச்செல்லும் வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில், நெல்லியடியைச் சேர்ந்த பொன்னுத்துரை காண்டீபன் (வயது - 40) என்பவரே உயிரிழந்தார். இவர் இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

விபத்து நடைபெற்ற இடத்தில் பாலம் சீரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன என்றும் மோட்டார்சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது அவர் விபத்துக்கு உள்ளானார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-26)




துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆரம்ப பிரிவு அதிபர் தயானந்தன் அவர்களின் அன்பு மாமனார்

நாகலிங்கம் நடராசா

அவர்கள் நேற்று (26.10.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினரும் பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலருமான

அன்றூ அஜித் சஞ்சீவ்

அவர்கள் 24.10.2021 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம்

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## முட்டுக்கொடுத்தலுக்கு பரிகாரமா?


பொதுஜன பெரமுன தலைமையிலான அரசுக்குள் உச்சக்கட்ட மோதல் வலுத்துள்ளது. அரச கூட்டணியில் உள்ள பங்காளிக் கட்சிகளிடையே கருத்து முரண்பாடுகளால் சிறு தணல் போன்று கனன்று கொண்டிருந்த விரிசல் பெருநெருப்பாகி இன்று எரிமலையாய் வெடித்துச் சிதறும் நிலைக்குச் சென்றுள்ளது. இப்போது அரசாங்கத்துக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி பங்காளிக்கட்சிகள் போராடும் முடிவை எடுக்குமளவுக்கு இந்த உட்கட்சி மோதல் உச்சமடைந்துள்ளது.

இந்த அரசில் ராஜபக்சக்களின் போக்கு எதேச்சாதிகாரம் மிக்கது. அரசில் எடுக்கப்படும் பல முடிவுகள் அவர்களின் தான்தோன்றித்தனமான போக்கின் வெளிப்பாடு என்பது ஒன்றும் பரம இரகசியம் அல்ல. அவர்களின் இத்தகைய போக்கால் அரசின் பங்காளிக் கட்சிகளிடையே முறுகல் ஏற்படுவதும் பின்னர் அது பூசிமெழுகி மூடிமறைக்கப்படுவதுமாக இருந்தது. ஒரு மடையை மறித்து வைத்திருந்து பின்னர் அது சட்டென திறக்கப்பட்டதும் எவ்வாறு தண்ணீர் கட்டாற்று வெள்ளமாகப் பீறிட்டுப் பாயுமோ அதுபோன்றுதான் அரசுக்குள் ஏற்பட்ட மனக்கசப்புகளும்.

பேசப்படாத – பேச்சுக்குச் செவிமெடுக்காத ராஜபக்சக்களின் போக்குக்கு எதிரான பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாடு, சிறுகச்சிறுக சேர்ந்து சேர்ந்து இன்று அரசுக்கு எதிராகப் போராடும் நிலைக்கும், 'மக்கள் அவை' என்ற தொனிப்பொருளில் மக்கள் சந்திப்புக்களை நடத்தி அரசுக்குள் இடம்பெறும் தன்னிச்சையான முடிவுகளை அம்பலப்படுத்தவும் அவர்களை உந்தித்தள்ளியுள்ளது. அரசைப் பணிய வைக்கவோ அல்லது அரசில் தம் இருப்பை – 'கெத்தை' – நிலைப்படுத்தவோ அல்லாமல், ஆத்மார்த்தமாக இந்த நிலைப்பாட்டை அரசின் பங்காளிக் கட்சிகள் வெளிப்படுத்தியிருந்தால் இது பாராட்டப்பட வேண்டிய விடயம்தான். அதில் மாற்றுக் கருத்தொன்றுமில்லை.

யுகதனவி மின்னுற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்குக் கைமாற்றும் செயற்பாடு, உரப்பிரச்சினை, எரிபொருள் விலையேற்றம் என்று ஏகப்பட்ட விடயங்களில் இந்த அரசு எதிர்ப்பை வாரிக்குவித்து வைத்திருக்கின்றது. இந்தத் தீவு எவ்வாறு நாலா பக்கமும் தண்ணீரால் சூழப்பட்டதோ அவ்வாறுதான் இந்த அரசின் ஆட்சியும் நாலா பக்கமும் ஊழல்களாலும், பிரச்சினைகளாலும், போராட்டங்களாலும், பேரணிகளாலும் சூழ்ந்ததாக மாறிவிட்டது. அரசின் செயற்பாடு எத்தகையது? உண்மையில் அரசுக்குள் என்ன நடக்கின்றது? ஏன் இவ்வாறான முரண் முடிவுகள் எடுக்கப்படுகின்றன? இந்த இரகசியத்தின் மையப்புள்ளி என்ன? என்பது மக்கள் மனங்களில் உள்ள மில்லியன் டொலர் கேள்வியாக இருக்கையில், இந்த மக்கள் அவை அவற்றுக்கெல்லாம் தகுந்த தெளிவுபடுத்தல்களை வழங்க வேண்டும் என்பதே தற்போது அனைவரினதும் பெருவிருப்பம்.

தவறுக்கு மட்டுமல்ல அதற்குத் துணை போவதும்கூட குற்றம்தான். ஆதலால், அரசுக்குள் இடம்பெற்ற தவறுகளை வெளிப்படுத்தும் வகையில் அதன் பங்காளிகள் செயற்பட்டால் அது நன்மைக்கே. மக்கள் மீது பெரியளவு விலைச்சுமையையும் அழுத்தங்களையும் ஏற்படுத்தியதைத் தவிர, வேறெதையும் சாதித்துவிடாத ஆட்சிக்கு முட்டுக்கொடுத்தமைக்கு செய்கின்ற நல்லதொரு பரிகாரமாகவும் இது அமையட்டும்.




## விவசாயக் கொள்கைக்கு எதிர்ப்பு: பேராசிரியர் மாரம்பே பதவி நீக்கம்

**கொழும்பு,ஒக்.27**

**பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் பேராசிரியர் புத்தி மாரம்பே, விவசாய அமைச்சின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளார்.**

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவால், அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் உதித் ஜயசிங்கவிடம் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக தேசிய விவசாயக் கொள்கை, இலங்கை விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம் மற்றும் சிறுதொழில் வியாபாரக் கூட்டுத் திட்டம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான நிபுணர் குழுவில் இருந்து பேராசிரியர் புத்தி மாரம்பே நீக்கப்பட்டுள்ளார் என்று அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் விவசாயக் கொள்கைகளுக்கு எதிராக சர்ச்சைக்குரிய அறிக்கைகளை வெளியிட்டதாலேயே, அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4)

## சீனாவிலிருந்து வந்த உரக்கப்பலை துறைமுகத்துக்குள் அனுமதியோம்!

### தரம்குறைந்த சேதனப் பசளையை பொறுப்பேற்கத் தயாரில்லை என்கிறது இலங்கை

கொழும்பு, ஒக். 27

"சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள தரம் குறைவான சேதனப்பசளையை இலங்கை பொறுப்பேற்காது. கொழும்புத்துறைமுகத்துக்குள் குறித்த கப்பல் நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது" என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது "சீனாவிடமிருந்து நாட்டுக்கு சேதனப் பசளையைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த பசளையில் மண்ணுக்குத் தீங்கு விளைவிக்கும் பக்ரீறியாக்கள் காணப்படுவது ஆய்வுமூலம் உறுதியானதையடுத்து கப்பலை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அந்தக் கப்பல் மீண்டும் வந்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இதற்கிடையில் சீனத்தூதுவரை விவசாயத்துறை அமைச்சர் சந்தித்துள்ளார். அப்படியானால் அரசின் முடிவு ஏதும் மாறியுள்ளதா"? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "உரிய தர நிர்ணயங்களுக்கு குறைவான சேதனப் பசளையை இலங்கை பொறுப்பேற்காது என்பது தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. பசளையை ஏற்றிவந்த கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைவது தடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கையை துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மேற்கொண்டுள்ளார். தரம் குறைவான சேதனப் பசளையை கொண்டுவரமாட்டோம். அதனால்தான் அவசர விலைமனுக் கோரல் ஊடாக 'நனோ நைட்ரஜன்' உரம் வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம்"- என்றார். (ம-44)

# 2022 வரவு – செலவுத்திட்டத்தில் மக்களுக்கு நிவாரணப் பொதி



**கொழும்பு,ஒக்.27**

**2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக, பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு நிவாரணப் பொதி வழங்கப்படும் என்று நீர்வழங்கல்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பின் காரணமாக நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக நிவாரணப் பொதி வழங்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை மீட்பதற்கு சிறந்த திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். வாழ்க்கைச் செலவுகளை அடிப்படையாகக் கொண்டு சமூக மட்டத்தில் தோற்றம் பெற்றுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். அதே வேளை அரசை வீழ்த்தும் நோக்கம் பங்காளிக் கட்சியினருக்குக் கிடையாது. தவறுகளைத் திருத்திக் கொண்டு சிறந்த முறையில் அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கிறோம். கெரவலப்பிட்டிய மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானத்துக்கு பங்காளிக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளோம் - என்றார். (ஒ-4)

# சுற்றிவளைப்புக்களில் 6பேர் அதிரடிக் கைது

பல்வேறு இடங்களில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சிறப்புச் சுற்றிவளைப்புகளில் போதைப் பொருள்கள் மற்றும் துப்பாக்கிகளுடன் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, முகத்துவாரம் பகுதியில், ஹெரோயினுடன் 38 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, பொரளை கோதமிபுர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஹெரோயினுடன் 42 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, முகத்துவாரம் டவலசிங்காராமப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஹெரோயினுடன் 42 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதே வேளை - ஹீனட்டியன பிரதேசத்தில் 560 லீற்றர் மதுபானத்துடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருநாகல், பொல்காவெல பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சுற்றி வளைப்பில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் 56 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருநாகல், திவுல்கஹகொட்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டு துப்பாக்கி, கட்டுத்துவக்குடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் - என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-22)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து நிபுணர் குழுவின் அறிக்கை தயார்

கொழும்பு,ஒக்.27

இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கைக் கடல் சூழலுக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியுடன் குறித்த கப்பல் நிறுவனத்துக்கு எதிராகக் குற்றப்பத்திரிகைகள் உடனடியாகச் சமர்ப்பிக்கப்படும் என்று கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தர்ஷனி லஹந்த புர தெரிவித்துள்ளார்.

கப்பல் தீப்பிடித்ததால் இலங்கைக் கடற்பரப்பில் ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பைக் கண்டறிய, அதற்கான மாதிரிகள் பிரான்ஸில் உள்ள செட்ரி நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டன. தண்ணீர் மற்றும் பிளாஸ்ரிக் மாதிரிகள் இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளன.

அதற்கமைவாக விசாரணைகளை மேற்கொண்ட இரண்டு பேராசிரியர்கள் தலைமையிலான 40 பேர் கொண்ட நிபுணர் குழுவின் அறிக்கை, நவம்பர் மாதம் 30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)



# கிணற்றில் இருந்து வெடிபொருள்கள் மீட்பு

சாவகச்சேரி,ஒக்.27

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கி ரவைகள் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டன.

பல வருடங்களாக பாவனையின்றிக் காணப்பட்ட கிணற்றைத் துப்புரவு செய்தபோது, கிணற்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் கட்டப்பட்ட நிலையில் உரப்பை ஒன்று இருப்பது அவதானிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸாரும் சிறப்பு அதிரடிப்படையினரும் ஆறுக்கும் மேற்பட்ட கைக்குண்டுகள் மற்றும் துப்பாக்கி ரவைகளை மீட்டனர். (ஜ-20)

# கடற்படை வருமானத்தை சுருட்டுவதற்கு முயற்சி

கொழும்பு,ஒக்.27

இலங்கைக் கடற்படைக்குக் கிடைக்கும் பெருந்தொகையான வருமானத்தை, மோசடியான வர்த்தகர் ஒருவருக்கு வழங்குவதற்கு தற்போதைய நிர்வாகம் முயற்சித்து வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சோமாலியக் கடற்கொள்ளையர்களிடமிருந்து படகுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் சந்தர்ப்பம் 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கடற்படைக்குக் கிடைத்தது. இரண்டு வருடங்களில் கடற்படைக்கு 2 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.

கொள்ளையர்கள் குழுவொன்று நிலைமையை அவதானித்து, ஒப்பந்தத்தை தாங்களே பெற்றுக் கொண்டது.

2012ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான மூன்று வருடங்கள் ஒப்பந்தத்தின் விளைவாக நாடு, கடற்படை மற்றும் திறைசேரி ஆகியன 10 பில்லியன் ரூபா வருமானத்தை இழந்துள்ளன - என்றார். (ஒ-4)



# பொதுநோக்கு மண்டபம் திறப்பு

முல்லைத்தீவு,ஒக்.27

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று கணுக்கேணி மேற்குப் பகுதியில் பொதுநோக்கு மண்டபம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திருமதி ம.உமாமகள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தை திறந்து வைத்தார்.

மேலும் நிகழ்வில கரைதுறைப்பற்று பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.கயுதரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன், கிராம அலுவலர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பொதுமக்கள் பிரதேச செயலரிடம் கணுக்கேணி மேற்கு வீதிகள் புனரமைக்கப்படவில்லை எனவும் வீதிகளைப் புனரமைத்து மழை வெள்ளம் வடிந்தோடக் கூடிய நிலைமையை உருவாக்கும்படியும் கோரிக்கை விடுத்தனர். (ஜ-13)

# எந்தப் போராட்டத்தாலும் அரசை வீழ்த்த முடியாது

## சந்திரசேன இறுமாப்பு

கொழும்பு,ஒக்.27

எந்தகைய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், அரசை ஒருபோதும் வீழ்த்த முடியாது என்று காணி அபிவிருத்தி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1960 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் பாரம்பரிய விவசாயத்தில் சேதனப் பசளை முறைமையே முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது. 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரசாயன உரம் விவசாய பயிர்ச்செய்கையை முழுமையாக ஆக்கிரமித்துள்ளது.

இரசாயன உரப்பாவனையால் மனித உடல் ஆரோக்கியத்துக்கு மாத்திரமல்ல மண் வளத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதுவரையிலான காலப்பகுதியில் சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் பேர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 10 ஆயிரம்பேர் வருடமொன்றுக்கு நீரிழிவு நோயால் உயிரிழக்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில் எதிர்காலத் தலைமுறையினரது நலனைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி, இரசாயன உரப்பாவனை மற்றும் இறக்குமதியைத் தடைசெய்து சேதனப்பசளைத் திட்டத்தை செயற்படுத்தினார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள் இடம்பெறுகின்றன. போராட்டத்தில் ஈடுபடுபவர்களில் 10 வீதமானோர் உண்மையான விவசாயிகள். ஏனையோர் அனைவரும் மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள்.

பெரும்போகத்துக்குத் தேவையான சேதனப் பசளை மற்றும் திரவ உரம் என்பன தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. சேதனப் பசளையைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளப்படும் நெல்லுக்கு 80 ரூபா உத்தரவாத விலை வழங்கப்படும்.

ஆகவே விவசாயிகள் போராட்டத்தைக் கைவிட்டு, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் - என்றார். (ஒ-4)

# மாதகலில் நங்கூரம் திருட கடற்படையே உதவி

## சிக்கியவர்கள் மீனவர்களுக்கு வாக்குமூலம்

**யாழ்ப்பாணம் ஒக்.27**

**மாதகலில் நங்கூரம் திருட முயன்ற குற்றச்சாட்டில் கைதானவர்கள் அதற்குக் கடற்படையினர் சிலரே தங்களுக்கு உதவினர் என்று தெரிவித்துள்ளனர்.**



மாதகல் பிரதேசத்தில் நங்கூரத்தை திருடிச் செல்ல முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் நால்வர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்தது. நேற்றுமுன்தினம் இரவு சந்தேகத்துக்கு இடமாக அந்தப் பகுதியில் ஹைஏஸ் வாகனம் ஒன்று பயணித்துள்ளது. அந்த வாகனத்தில் இருவர் பயணித்த நிலையில், சந்தேகமடைந்த அந்தப் பகுதி மீனவர்கள் வாகனத்தைப் பின்தொடர்ந்துள்ளனர்.

ஓரிடத்தில் பற்றைகளுக்குள் இருந்து வந்த இருவர், அந்த வாகனத்தில் ஏறியதை அடுத்து, மீனவர்கள் அந்த வாகனத்தை முற்றுகையிட்டு விசாரணை மேற்கொண்டனர். அவர்கள் நங்கூரம் திருட முற்பட்டனர் என்று தெரிவித்து நால்வரையும் இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். ஹைஏஸ் வாகனமும் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டது.

சந்தேகநபர்களை விசாரித்த போது, கடற்படையைச்சேர்ந்த சிலரே தங்களைத் தொடர்பு கொண்டு 2 ஆயிரம் கிலோ இரும்பு இருக்கின்றது என்று கூறினர் என்றும், தங்களுக்கு நங்கூரம் என்றால் எப்படி இருக்கும் என்றே தெரியாது என்றும் அவர்கள் கூறினார்கள் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மாதகல் கிராமிய அமைப்பின் தலைவர் செ.அழகன், பாதுகாப்புக்காக என்று அமர்த்தப்பட்டுள்ளவர்களே இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் துணை போவது ஏற்க முடியாதது.

இது எமது வாழ்வாதாரத்தை பாதிக்கும் விடயமாகும். இது தொடர்பாகக் கடற்றொழில் அமைச்சருக்கு அறிவித்துள்ளோம்.

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திலும் முறையிட்டுள்ளோம். இதில் தொடர்புடையவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக்கொடுக்காவிட்டால் நாம் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் -என்றார். (எ-125-319)

## பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி இந்த வாரம்

கொழும்பு,ஒக். 27

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி இந்த வாரம் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி.உடவத்த தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று நெருக்கடியில், ஊழியர்கள் இல்லாமை காரணமாக, வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## கம்யூனிஸ்ட் கட்சிக்கு தவிசாளர் நியமனம்

கொழும்பு, ஒக். 27

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பதில் தவிசாளராக நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்கவை நியமிக்க, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து ராஜா கொல்லுரே நீக்கப்பட்டுள்ளதை அடுத்து, உப தலைவர் வீரசுமன வீரசிங்கவை பதில் தலைவராக நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற மத்திய குழுக்கூட்டத்தில் தவிசாளர் பதவியிலிருந்து ராஜா கொல்லுரேயை நீக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-4)



### பூந்தோட்டம் பகுதியில் அதிகரித்துள்ள

## சமூக விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை!

வவுனியா,ஒக்.27

வவுனியா பூந்தோட்டம் சந்திப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சமூகவிரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் பூந்தோட்டம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த பகுதியில் ஒன்றுகூடும் ஒருசில இளைஞர்களால் பொதுமக்கள் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

மதுபோதையில் நிற்கும் அவர்கள் பெண்களுடன் அநாகரிமான முறையில் நடந்துகொள்வதுடன்,தகாத வார்த்தைப் பிரயோகங்களையும் மேற்கொண்டுவருகின்றனர் என்று பொதுமக்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வவுனியா நகருக்கு தொழிலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும் பலரிடம் குறித்த நபர்கள் பணத்தை பறிப்பதாகவும், வியாபார நிலையங்களில் பொருள்களை கொள்வனவு செய்பவர்களிடம் வம்புச்சண்டை செய்வதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

எனவே பூந்தோட்டம் சந்தி பகுதியைப் பயன்படுத்தும் பொதுமக்களின் நன்மை கருதி இவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது என கலந்துரையாடலில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (ஐ-110)

## தடையை நீக்கியது சிங்கப்பூர்



இலங்கை உட்பட ஆறு நாடுகளுக்கு கடந்த ஆறு மாதங்களாக விதித்திருந்த பயணத் தடையை, இன்று முதல் நீக்குவதற்கு சிங்கப்பூர் அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கையைத் தவிர, பங்களாதேஷ், இந்தியா, மியான்மர், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கான தடையும் நீக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்த நாடுகளில் இருந்து மீண்டும் நாடு திரும்புவோர் சிங்கப்பூர் அரசால் வசதி செய்யப்பட்ட இடங்களிலும், சிங்கப்பூர் வாசிகள் தங்கள் வீடுகளிலும் 10 நாள்கள் தங்கியிருக்க வேண்டும் என்று சிங்கப்பூரிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ம-4)

## தாக்குதல் சம்பவத்தில் தம்பதியினர் காயம்

சாவகச்சேரி,ஒக்.27

தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த தம்பதியினர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருசுவில், தவசிகுளம் பகுதியில் இடம்பெற்றது. வளவுக்குள் அத்துமீறி நுழைந்த அயல் வீட்டுக்காரர் தம்மை தாக்கியதாக காயமடைந்த தம்பதியினர் தெரிவித்தனர்.

69 வயது கணவனும், 52 வயது மனைவியுமே இவ்வாறு தாக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

## புத்தாக்க கண்டுபிடிப்பாளர் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலை அணி முதலிடம்



யாழ்ப்பாணம்,ஒக்.27

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட, புத்தாக்க கண்டுபிடிப்பாளர் போட்டியில், யாழ். பல்கலைக்கழக மாணவர் அணி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மாணவர்களிடையேயான புத்தாக்க ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், இலங்கை பொறியியல் கல்வி நிறுவகம் நடத்திய இளமாணி மாணவர் புத்தாக்கப் போட்டியில், யாழ். பல்கலைக்கழக பிரிவால் கண்டுபிடிக்கப்பட்ட உணவுக் கழிவுகளில் இருந்து பொலித்தீன் சீற்றைப் பிரித்தெடுக்கும் பொறி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இந்தப் போட்டியின் வெற்றியாளர் தெரிவுக்கான நடுவர்களாக இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவின் அதிகாரிகள் பங்குபற்றினர். (ஒ-4-20)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
**திரு. சி.சிவானந்தம்**
அவர்களின் அன்புச் சகோதரி
**திருமதி சிவனேஸ்வரன் கனகேஸ்வரி**
அவர்கள் 18.10.2021 அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு. அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
**கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி**

## 100 ஆவது அகவை நாள் வாழ்த்துக்கள்
**27.10.2021**




**திரு. சுப்பிரமணியம் பொன்னுச்சாமி**
**(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அருகாமை)**

எமது கொக்குவில் மத்திய சனசமூக நிலைய (KCCC) ஆரம்ப கால உறுப்பினர்களும், விளையாட்டு வீரர்களுமான நா.நந்தகோபன் நா.நந்த குமார் நா.நந்தயாளன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பா மதிப்புக்குரிய திரு. சுப்பிரமணியம் பொன்னுச்சாமி (தற்போது அவுஸ்ரேலியா) அவர் களின் **100ஆவது அகவையை** கொண்டாடும் இன்றைய தினம் அவர் களது நண்பர்களாகிய நாமும் கவிதை வரிகளால் வாழ்த்துகின்றோம்.

*சீர்பூத்த கொக்குவில் அகம் பதித்த*
*திறம்பூத்த செயல்வீரனே!*
*தேர்பூத்த நெறி நின்று கடமைசெய்த*
*நெஞ்சுரம் மிக்க தீரனே!*
*வல்லமையோடு வாழும் எங்கள்*
*நல்மனம் கொண்ட மாண்பினனே!*
*நூற்றாண்டு விழா காணும்*
*காவிய நாயகனே!*
*பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவென*
*நாமும் களிப்புடனே வாழ்த்துகின்றோம்.*

**KCCC நண்பர்கள்**

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-19 முஸ்லிம் கல்லூரி வீதி ஆதன இல 36 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் K.M.M முகமட் சலிதான் என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை முகமட் மீரான் சாகிப் முகமட் தாயூப் நீர் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு M.M.M றமீஸ் அவர்கள் முகதாவில் 2003.03.31ம் திகதி 219ம் இலக்கத்தில் நிறை வேறிய பிரகடன உறுதி மூலம் குறித்த ஆதனம் தனக்குச் சொந்தமானது என பிரகடனப்படுத்தியுள்ளார்.

பின்னர் யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதி இலக்கம் 12பி தற்போது புத்தளம் இரத்மல்யாய கொழும்பு வீதியைச் சேர்ந்த முகமட் மீராசாகிப் முகமட் தாயூப் பிரசித்த நொத்தாரிசு எஸ்.சிவபாதம் முகதாவில் எழுதப்பட்ட 3736 இலக்க 26.03.2009ம் திகதி எழுதப்பட்ட அறுதி உறுதி மூலம் மௌதாஸ் சைலஸ்ரீ என்பவருக்கு அறுதியாக விற்பனை செய் துள்ளார்.

**ஆதன விபரம்:-**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "பள்ளுவிலித் தோட்டம்" நிலபரப்பு ஒன்று குளி பதின்மூன்று தசம் இரண்டு மூன்று (நில.பர.01 குளி 13.23) வீடும் கிணறும் வான் பயிர் செய்பயிர்களும் இது 18.03.2003ல் நில அளவையாளர் கே.கனகசபை அளந்து வரைந்து தயாரித்த 1007/03ம் இலக்கப்படத்தில் 1ம் துண்டாக காட்டப்பட்டுள்ளது.

**இதன் எல்லைகள்**

வடக்கு :- கற்குளம் வீதியிலுள்ள வாய்க்கால்
கிழக்கு :- முருகேசு பெண் வரதநாயகிக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம்.
மேற்கு :- முஸ்லிம் கல்லூரி வீதியிலுள்ள வாய்க்கால்
தெற்கு :- மீரான் சாகிப் முகமட் தாகீரின் ஆதனம்.

தற்போது மௌதாஸ் சைலஸ்ரீ இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத் தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மௌதாஸ் சைலஸ்ரீ என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக் கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**

## கண்ணீர் அஞ்சலி



எமது வளர்மதி நிறைவாழ்வக
செயலாளர் ச.**அஜித்தன்** அவர்களின் அம்மப்பா
**திரு.நாகலிங்கம் நடராசா**
அவர்கள் நேற்று (26.10.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அவரது மறைவிற்கு எமது அஞ்சலியினை செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இயற்கையை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வளர்மதி நிறைவாழ்வகம்**
**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்.**

**சம்பியன் லேன்,**
**கொக்குவில்.**

## அற்றோணி தத்துவ பத்திரத்தை இரத்து செய்தல்

இத்தாற் சகலருமறிக சிவபாலன் மகள் கிருஷிகாவுக்கு சொந்தமான மீசாலை மேற்கு மீசாலையில் அமைந்துள்ள வாரிவளவு நி.பர 5 மற்றும் நீராகரங்கேணியும் ஆலடியும் நி.பர 3 ஆதனங்கள் தொடர்பாக அவற்றை பராமரிக்கவும் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் எமது சார்பாக செயற்படுவதற்கும் அல்லாரை தெற்கு மீசாலையைச் சேர்ந்த சதாசிவம் மகேந்திரன் (NIC 590612014V) என்பவரை எங்களின் அற்றோணிகாரராக நியமித்து 30.12.2010 இல் சுவிற்சர்லாந்தில் இருந்து விசேட அற்றோணி தத்துவ பத்திரம் ஒன்றை வழங்கியிருந்தோமென்றும் அதில் சொல்லப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்பட்டு முடிவுற்றமையாலும் குறித்த அற்றோணி தத்துவ பத்திரம் தொடர்ந்தும் வலுவில் இருக்கும் அவசியம் அற்றுப் போயுள்ளதாலும் குறித்த அற்றோணி தத்துவ பத்திரத்தை இத்தால் இரத்து செய்தும் வலுவற்றதாக்கியும் விடுகின்றோம் மேற்படி விடயமாக குறித்த சதாசிவம் மகேந்திரன் இன்று முதல் எங்களின் அற்றோணி தத்துவகாரர் அல்ல என்றும் இவ்விடயத்தில் அவருடன் ஏற்படுத்தப்படும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நாம். பொறுப்பாளிகள் அல்லர் என்றும் இத்தால் வெளிப்படுத்தி இவ் அறிவித்தல் விடுக்கின்றோம்.

25.10.2021

**சுந்தரம் சிவபாலன்**

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
15
.
05
.
1928



இறப்பு
26
.
10
.
2021

**சித்தர் குமாரவேலு இராசையா**

**(இளைப்பாறிய கிராம சேவையாளர்)**
**கண்டாவளை மண்ணின் மைந்தன்**

பாடல்கள், பதிகங்கள் பல பாடி
பலர் போற்றும் சிறந்த நூல்கள்
படைத்த வல்லோன்.
கிராமத்தின் சேவகராய்
பணியாற்றி கோணாங்குள
விநாயகர் மீது துதிபாடி
கண்டாவளைக் கவிராயர் பட்டம்
பெற்று கோணங்குளத்தானின்
பாதார விந்தங்களைப்
பற்றிக்கொண்டான்.

**உடன் பிறவாச் சகோதரன்**
**ம.விநாயகமூர்த்தி குடும்பம்**
**(சுவிற்சர்லாந்து)**

# அதானி வந்ததன் நோக்கம் என்ன?

கொழும்பு, ஒக். 27

இலங்கையிலுள்ள முதலீட்டு வாய்ப் புகளை ஆராயும் நோக்கில் இந்தி யாவின் கோடீஸ்வரரான அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி நாட்டுக்கு வந்திருக்கக்கூ டும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் நேற்றைய ஊடகவியலா ளர் மாநாட்டில் அவர் மேலும் தெரி விக்கையில்,

"தனிப்பட்ட பயணம் மேற்கொண்டே அவர் இங்கு வருகை தந்துள் ளார். இலங்கை யில் உள்ள முத லீட்டு வாய்ப்பு கள் சம்பந்தமாக அவரின் நிறு வனம் தகவல் களை திரட்டியுள் ளது. கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனை யத்தை மேம்ப டுத்துவதற்கான முதலீட்டை மேற்கொள்வ தற்கு அதானி நிறுவனம் விருப் பம் தெரிவித் துள்ளது.

எனவே, அது தொடர்பிலும் இலங்கையில் உள்ள முதலீட்டு வாய்ப்புகளை கண்காணிப் பதற்கும் வந் திருக்கலாம். இது தொடர்பில் இன்னும் அதி காரபூர்வமான தகவல் வெளியா கவில்லை.

இலங்கைக்கு வெளிநாட்டு முத லீடுகள் அத்தியா வசியம். எனவே, முதலீட்டாளர் களுக்கான சூழலை உரு வாக்க வேண் டியது அரசின் பொறுப்பாகும்." என்றார். (த-44)

## பிரசித்தி பெற்ற ஆலயத்தில் தொழில் வாய்ப்பு

ஆலயத்தில் பணிபுரிய ஆசாரமுடைய பணியாளர்கள் தேவை.

**வயதெல்லை : 30 - 55**

**01. உதவி அந்தணர் - 1**
தகைமை நிறைந்த முழுநேர நித்திய கருமங்களை சிறப்புற செய்யக்கூடியவர்.

**02. அலுவலக உதவியாளர் - 1**
ஆசாரமுடைய அன்றாட கடமைகளை சிறப்புற ஆற்றக்கூடியவர்.

**03. ஆலய உதவியாளர் - 1**
ஆசாரமுடைய உள்ளார்ந்த வேலைகளில் அனுபவம் மிக்க நன்கு நைவேத்தியம் தயாரிக்க கூடிய நித்திய கருமங்களை ஆற்றக்கூடியவர்

**04. விவசாய, கால்நடை பராமரிப்பாளர் - 1**
விவசாயம் கால்நடை பற்றிய அறிவுடைய ஆலயம் சார்ந்த பணிகளும் செய்யக்கூடியவர்.

தகுதி உடையவர்கள் ஆலயத்தில் தங்கி நின்று பணி புரியக்கூடியவர்களும் 31.10.2021 திகதிக்கு முன்னர் Whats app / Viber / தொலைபேசி ஊடாக விண்ணப்பங்களை அனுப்ப முடியும்.

**T.P No : 077 857 6896**

## 2022ம் ஆண்டுக்கான வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

மாவட்ட செயலகம் - கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கும், கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்குமான 2022ம் ஆண்டுக்கான வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 06.12.2021ம் திகதிவரை கோரப்படுகின்றது.

பதிவு நிபந்தனைகள், கட்டண விபரங்கள், மாதிரி விண்ணப்ப படிவம் என்பவற்றை மாவட்ட செயலக நிதிக்கிளை மற்றும் பிரதேச செயலகங்களில் அல்லது www.kilinochchi.dist.gov.lk எனும் மாவட்ட செயலக இணையத்தளத்தில் 06.12.2021 திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலக பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். 021 2285352, 021 2285309

திருமதி.றூ.கேதீஸ்வரன்
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 . 10 . 1947

மறைவு 07 . 10 . 2020



திதி: சப்தமி (27.10.2021)

### அமரர் பொன்னுத்துரை தவபாக்கியம்

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம் மனக்குமுறல்
பாரில் எமைத் தவிக்கவிட்டு
பரமனடி சேர்ந்தீரோ
கலையாத உங்கள் நினைவுகளுடன்
நிதமும் ஏங்கி தவிக்கின்றோம்.

இடைக்குறிச்சி, வரணி. குடும்பத்தினர்

## தேவகி food Center

GRAND Opening Invitation

**திருமதி. இராமநாதன் சிவமங்கை தவிசாளர்**
(சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி) **அவர்களால்**

**27.10.2021 புதன் கிழமை**
**பகல் 11.00 மணிக்கு**
**திறந்து வைக்கப்படும்**

சாவகச்சேரி நகரசபைக்கு முன்பாக

## 100 ஆவது அகவை தின வாழ்த்துக்கள்

27.10.2021




### திரு. சுப்பிரமணியம் பொன்னுச்சாமி

(கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அருகாமை)

எமது வளர்மதி நிறைவாழ்க சிறார் கல்வி திட்டத்தில் தன்னை ஈடுபடுத்தி கடந்த 20 வருடங்களாக உதவிபுரிந்து வரும் திரு.நா.நந்தகோபன் அவர்களின் பெரியப்பாவும் எமது ஆர்வலர் திருமதி. யசோ அவர்களின் தந்தையாருமாகிய மதிப்பார்ந்த பெரியார் சுப்பிரமணியம் பொன்னுச்சாமி (அவுஸ்ரேலியா) அவர்கள் இன்றைய தினம் தனது **100 ஆவது அகவை** நாளை கொண்டாடும் வேளைதனில் "வளர்மதி சமூகமும்" இணைந்து பல்லாண்டு வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சம்பியன்லேன், கொக்குவில்.
**வளர்மதி நிறைவாழ்வகம்,**
**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்**

## Happy Birthday



அகவை 100ல் (27.10.2021)
அன்போடு வாழ்த்துகிறோம் வாழி! வாழி!

### திரு.சுப்பிரமணியம் பொன்னுச்சாமி

(ஓய்வு நிலை கணக்காய்வாளர் (Auditor) தபால், தொலைத்தொடர்பு திணைக்களம்)

அதிசயப் பிறவியாய் அகிலம் வியக்க
அகவை நூறை கடல் கடந்த நாட்டில்
களிப்புடனே கொண்டாடும் சுந்தர முகத்தோன்
சுப்பிரமணியம் பொன்னுச்சாமி
அவர்களை உடல் உள ஆரோக்கியத்துடன்
இன்னும் பல்லாண்டு இன்புற்றே வாழ
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகள்
அருள் வேண்டி வாழ்த்துவதில் பெருமையும்
பெருமகிழ்வும் அடைகின்றோம்.

கொக்குவில் வாழ் உறவுகளும்,
நலன்விரும்பிகளும்

*Happy 100th Birthday!*
*May all your wishes come specially true on this very special Birth Day.*
*Relations & Well wishers*

## நாக பூஷணி திருமண சேவை

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அரச உயர் பதவியிலுள்ளோர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர், O/L, A/L படித்தவர்கள், வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்.

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் **உடன்** தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**


## கண்ணீர் அஞ்சலி


யாழ் போதனா வைத்தியசாலையில் தாதிய பரிபாலகி யாகக் (Matron) கடமையாற்றிய
**திருமதி சிவகுமாரன் அனுஷாபவானி**
அவர்களின் அன்புத் தாயார்

### இராமலிங்கம் இராசம்மா

அவர்கள் கடந்த 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலமான தையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## நெஞ்சை விட்டு அகலா 1ஆம் வருட நினைவஞ்சலி



மலர்வு 03.03.1956 — உதிர்வு 07.11.2020


### அமரர் திரு. பொன்னுத்துரை மகேஸ்வரன்

அன்பு, இரக்கம், கொடை ஆகியவற்றை எல்லோரிடமும் காட்டி எல்லோர் மனதிலும் நீங்கா இடம் பிடித்த எம் குல விளக்கு அணைந்து ஓராண்டு ஆனாலும் உங்கள் நினைவுகள் எம்மனதை விட்டு நீங்காது
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஏழாலை வடக்கு,
ஏழாலை

குடும்பத்தினர் மற்றும்
மனைவி பார்வதிதேவி

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.01.1981 — மறைவு 18.10.2011

### செல்லத்துரை வினோகரன்

திதி: ஷஷ்டி

நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கி
ஆண்டுகள் பத்து சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இடைக்குறிச்சி,
வரணி

குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில் பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றிய
**திருமதி பத்மகாந்தன் குகமலர்**
அவர்களின் அன்புத் தந்தையார்

### முருகேசு குலரத்தினம்

அவர்கள் கடந்த 21.10.2021 வியாழக்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

சிவமயம்

## சிவலோகப்பிராப்தி நினைவு கூரல்



சீவலோக யாத்ரா ரம்பம் 15.06.1945

சிவலோக யாத்ரா ஆரம்பம் 27.09.2021

### அமரர் சிவகுரு அரியரத்தினம்

கற்குழி வடக்கு சாவகச்சேரி

எமது ஆலயத்தினுடைய
முன் நாள் ஆட்சி மன்ற அங்கத்தவர்
இந் நாள் ஆட்சி மன்ற அங்கத்தவரின் மாதுலர்
பல பெரும் எடுப்பிலான திருப்பணிகளே தனி உபயமாக அர்ப்பணித்தவர்
மகோற்சவ எட்டாம் தின சப்பரத் திருவிழா உபயதாரர்
**"அமரர் சிவகுரு அரியரத்தினம் அவர்கள்"**
விநாயகப் பெருமானுடைய காணாபத்திய லோகத்தில் சுகித்திருக்கப் பிரார்த்திக்கின்றோம்
அன்னாரது துணை இழந்த உறவுகட்கு எப்போதும்
விநாயகப் பெருமான் திருவருள் துணை இருக்கும்

**ஓம்**
**ஸாந்தி ஸாந்தி ஸாந்தி ஹி**

**விநாயகர் ஆலய தர்மபரிபாலன சபை சார்பில்**
**செயலாளர்**
**சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 . 09 . 1947 — உதிர்வு 07 . 11 . 2020

### வைத்தீசுவரக்குருக்கள் சச்சிதானந்தன்

(ஓய்வுநிலை திட்டமிடல் பணிப்பாளர்)

அண்ணா நீ
இடையில் வந்த உறவல்ல
இரத்தத்தால் வந்த உறவே
இடையில் நீ பிரிந்தாலும்
பாசமது மறையாது
மீதி இங்கு ஏதுமில்லை
பாசத்தைத் தவிர
உன் இழப்பால் நாமிங்கு
ஏதிலியாய்ப் போனோம்

உன் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

அன்புச் சகோதரிமார்

## அங்கஜன்...

என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க தீவிர முயற்சியில் இறங்கியுள்ளார் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் மூலமாக நம்பகரமாக அறியமுடிகின்றது.

அங்கஜன் தற்போது, சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். அரசு மீதான மக்களின் நல்லபிப்பிராயம் அருகிவருகின்றது என்று அரச கூட்டணியிலுள்ள கட்சிகளும், எதிரணிக் கட்சிகளும் கூறிவரும் நிலையில், தனது அரசியல் இருப்பைத் தக்கவைக்கும் நோக்கில் புதிய கட்சியை அங்கஜன் ஆரம்பிக்கின்றார் என்று கொழும்பிலிருந்து வரும் நம்பகரமான தகவல்கள் மூலம் அறியமுடிகின்றது.

அரசியல் கட்சி ஒன்றைப் பதிவுசெய்வதாயின், அந்தக் கட்சி குறைந்தது 5 வருடங்கள் செயற்பாட்டில் இருந்திருக்கவேண்டும் . எனினும், கடந்த உள்ளூராட்சி தேர்தலில் அங்கஜனின் தந்தையாரான இராமநாதன் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டிருந்தார். இதனால் தற்போது உருவாக்கிய புதிய கட்சியை தேர்தல்கள் ஆணைக்குழு பதிவுசெய்யாமல் நிராகரிக்கவே அதிக வாய்ப்புள்ளது என்றும் கொழும்புத் தகவல்கள் கூறியுள்ளன.

ஏற்கனவே கடந்தமுறையும் இவ்வாறு அங்கஜன் சார்பில் விண்ணப்பிக்கப்பட்டிருந்த கட்சியை தேர்தல்கள் ஆணைக்குழு நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## கொரோனாவால்...

றுத்தல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அங்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டமையை அடுத்து, மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். திட்டமிடல் கிளை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (த-இ)


## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் சதயம் 2ம் பாதம், 1983 ல் விவசாய குடும்பத்தில் பிறந்த அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. **077 036 0555**

## Book keeper - Pharmacy

யாழ்ப்பாணத்தில் புதிய பாமசி ஒன்றுக்கு பாமசி அனுபவம் உள்ள Book Keeper தேவை.
தொடர்பு: **077 036 0555**

## Job Vacancy-Jetwing Jaffna

1) Kitchen Department
Commis I / Commis II / Commis III
(Hot Range, Pastry & Bakery)
2) Food & Beverage
F&B Steward & Stewardess

**No.37, Mahathma handi Road, Jaffna.**
**e-mail: hr.jaffna@jetwinghotels.com**
**Mobile:0707 163 756 / 0707 214 915 / 0707 458 567**

## வேலையாள் தேவை

சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் அமைந்துள்ள வீட்டில் தங்கி நின்று சமையல் வேலைசெய்வதற்கு பெண் வேலையாள் தேவை.
சம்பளம் நேரில் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு: **077 854 7698**
**077 969 1365**

# இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

"சுத்தமான நீர், சுகமான வாழ்வு"




மாபெரும் விலைக் கழிவு

**Rs.29,000/=**

~~Rs 35,000/=~~

TDS <2000PPM

* இலவச நீர் பரிசோதனையுடனும்,

* மிகக் குறைந்த விலையிலும்,

* அதிகபட்ச உத்தரவாதத்துடனும்,

* எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,

* வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்

* 24 மணித்தியாலத்தினுள் முறைப்பாட்டு திருத்திக்கொடுத்தல்



Yarl Smart Water Solution


**YARL SMART** *Water solution (Pvt) Ltd.*

341, KKS Road, Jaffna / Karadippoku Junchtion, Jaffna Road, Kilinochchi.

**021 430 0044, 076 666 5267**

yarlsmartwater@gmail.com / www.yarlsmartwater.com

# மரண அறிவித்தல்



பிறப்பு
28.01.1928

இறப்பு
26.10.2021

## தாமோதரம்பிள்ளை இராசம்மா

காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற கந்தப்பு தாமோதரம்பிள்ளையின் மனைவி இராசம்மா அவர்கள் நேற்று (26.10.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய கணபதிப்பிள்ளை, சிவகாமியின் மகளும், காலஞ்சென்றவர்களாகிய கந்தப்பு, தெய்வானையின் மருமகளும், சிந்தாமணி, முருகதாஸ் (லண்டன்), தேவதாஸ் (தாஸ் ஹாட்வெயார் வவுனியா), தவராசா (தாஸ் ஹாட்வெயார், திருநெல்வேலி), ரகுபதி (கனடா), தனபால் (தாஸ் ஹாட்வெயார், சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நடராஜா, பாலாம்பிகை (லண்டன்), சாந்தி (வவுனியா), சித்ரா, ரஞ்சினி (கனடா), விஜயலஷ்சுமி ஆகியோரின் மாமியாரும், சுதர்சினி (சுவிஸ்), வாசுகி, ரஜீபன் (சுவிஸ்), கிரிதரன் (Jetwing Jaffna), கிரிசாந் (லண்டன்), பிரிசாந் (லண்டன்), துஷாந் (லண்டன்), ஜதீஸ், குகதீஸ் (Ideal Finance, Jaffna), தனுஷா (Zonal Education office, Vavuniya North), வாகீஸ் (கனடா), தஷிதா, தனுஷியன் (சுவிஸ்), ருஷாந், சஜிதரன் (சுவிஸ்), கிருஷா (கனடா), மோகனபிரியன் (Sampath Bank, Colombo) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபிலாஷ், துளசி, மதுரன், மிதுரா, மதுரா, ஆதித்ரா ஆகி யோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளிற்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பபடும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தகவல்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் நடராசா

**(யாழ். பரமேஸ்வரா கல்லூரியின் மாணவன், ஆசிரியர், அதிபர், அகில இலங்கை அரசினர் தமிழ் ஆசிரியர் சங்க பண்டாரவளைக் கிளை முன்னாள் செயலாளர், அகில இலங்கை ஆசிரியர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் பொருளாளர்)**



தோற்றம்
28.02.1929

மறைவு
26.10.2021

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நடராசா அவர்கள் நேற்று (26.10.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகாம்பாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இரத்தினத்தின் சகோதரனும், தமிழரசி, கலையரசி, அன்பரசன், எழிலரசி, மதியரசன், புவியரசி, அருள்ரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் சுபாங்கி, மகாதேவன், சுந்தரவல்லி, மகிந்தராஜ், தயானந்தன் ஆகியோரின் மாமனாரும், யோகலட்சுமி, யோகாம்பிகை, யோகேஸ்வரி, செல்வராணி, மல்லிகா, விக்னேஸ், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும், கௌசிகா - கஜபதி, அஜித்தன், துவாரகா, அக்ஷயா, நவீன்ராஜ், யுவராஜ், சாருகன், பிரியந்தன், யுவாணி, ஜனார்த், திவானி ஆகியோரின் அன்புப் பேரனும், டிநேசனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாகலிங்கம் வீதி,**
**கொக்குவில் மேற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### வீட்டுக்குச்...

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்ததை நாம் அவதானித்தோம்.

அதுமட்டுமன்றி ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் 11 கூட்டணிக் கட்சிகள், அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.

குறிப்பாக அரசில் அங்கம் வகிக்கும் சுசில் பிரேமஜயந்த கடுமையான விமர்சனம் ஒன்றை அரசுக்கு எதிராக முன்வைத்தார். இந்த அரசு தோல்வியடைந்து விட்டது என அவர் கூறினார்.

அரசு எடுத்த அனைத்துத் தீர்மானங்களும் தோல்வியடைந்துவிட்டன என்று அவர் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார்.

அரசின் தீர்மானங்கள் தோல்வியடைந்துள்ளதை, அரசில் அங்கம் வகிப்பவர்களே புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர்.

நாடுமிகவும்மோசமானநிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசில் அங்கம் வகிப்பவர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளமை தெளிவாகியுள்ளது. இந்த அரசை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இல்லையேல் நாட்டுக்குத்தான் பேரழிவு" -என்றார். (து-22)

### முதலாம்...

திகதி தொடக்கம் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்பிக்கும் தினத்தை தீர்மானிக்கும் அதிகாரம் ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

முதல் கட்டத்தின் கீழ், 2 வாரங்களுக்கு கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு அலகுகளையும் பெற்றுக்கொண்ட மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். - என்று தலைவர் மேலும் தெரிவித்தார். (து-இ)

### பிரதேச சபை...

நேற்று உயிரிழந்தார்.

வவுனியா, கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகேந்திரன் (வயது -52) என்பவரே இவ்வாறு சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

இவர் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார்.

இதேவேளை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை மாதாந்த அமர்வுக்காக கடந்த மாதம் 24 ஆம் திகதி கூடிய போது, மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜென் பரிசோதனையில், அவருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டு, வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-18)

### கல்லெறி...

இணையவுள்ளோம்எனக்கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும்." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர் பதவியை நாம் இராஜினாமா செய்துள்ளோம். இது தொடர்பான கடிதத்தை கட்சியின் செயலாளருக்கு அனுப்பி சில நாள்கள் ஆகின்றன. எமக்கு பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பில் கட்சிக்குள் பேச்சு நடத்தி தீர்வை காணவே நாம் முற்படுகின்றோம். நிலைமை இப்படி இருக்கையில் எமக்கும், செயலாளருக்கும் தெரிந்த விடயம் எப்படி கட்சியை விட்டு வெளியில் சென்றது?

இந்த அரசு செல்வாக்கை இழந்துவிட்டது. மக்கள் கல்லெறிந்து விரட்டியடிக்க தயாராகிவிட்டனர். இப்படியானதொரு அரசில் இணையவேண்டிய தேவை எமக்கு கிடையாது. தனது வங்குரோத்து அரசியலை சரிசெய்யவே எம்மை வைத்து அரச தரப்பு பரப்புரை செய்கின்றது. அதற்கு எமது கட்சியில் உள்ள சிலரும் துணைபோயுள்ளனர். இப்படியான சூழ்ச்சியாளர்களை கட்சித் தலைமை அடையாளம் காண வேண்டும். " - என்றார். (து-44)

### யார்....

ரவு வழங்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கும், தொழிற்சங்க பிரமுகர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச்சந்திப்பில் அமைச்சர் விமல் வீரவன்ச, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அத்துரலிய ரத்ன தேரர் உட்பட மேலும் பலர் பங்கேற்றனர்.

'யுகதனவி' மின் உற்பத்தி நிலையகத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் தீர்மானத்தை முறியடிப்பது தொடர்பில் இதன்போது தீவிரமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன், இதற்கான அழுத்தத்தைப் பிரயோகிக்கும் வகையில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. இந்தச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் உதய கம்மன்பில,

"ஐக்கிய தேசியக்கட்சி செய்யும்போது தவறாக இருந்த ஒரு விடயம் நாம் செய்யும்போது சரியாகிவிடாது. சரி என்றால் அதை யார் செய்தாலும் சரி. தவறென்றால் அதை யார் செய்தாலும் தவறு. நபர்கள் முக்கியமில்லை.

எம்மால் உருவாக்கப்பட்ட அரசு, எமது அணி என, தவறு இடம்பெறும்போது அமைதியாக இருந்தால் அரசிடமிருந்து மக்கள் விலகிவிடுவார்கள். அரசைப் பாதுகாக்கவே நாம் செயற்படுகின்றோம். மக்கள் சபைக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி நிச்சயம் நடக்கும்."- என்றார். (து-44)

### வடக்கு...

மனைக்கு 62 மருத்துவர்களும் வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளுக்கு 191 மருத்துவர்களும் புதிதாக நியமிக்கப்பட் டுள்ளனர்.

இவ்வாறு, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில், யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் உள்ள மருத்துவமனைகளுக்கு 57 பேரும், கிளிநொச்சி பிராந்திய மருத்துவமனைகளுக்கு 28 பேரும், முல்லைத்தீவு பிராந்திய மருத்துவமனைகளுக்கு 24 பேரும், மன்னார் பிராந்திய மருத்துவமனைகளுக்கு 35 பேரும், வவுனியா பிராந்திய மருத்துவமனைகளுக்கு 47 பேரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக மருத்துவர்களுக்கு பற்றாக்குறை நிலவி வந்தது. குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள மருத்துவமனைகளில் மிக மோசமான பற்றாக்குறை காணப்பட்டது.

இந்தநிலையில், கடந்த 22 ஆம் திகதி நாடு முழுவதும் ஒரு தொகுதி மருத்துவர்களுக்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்குறித்த தொகையினர் வடக்கு மாகாணத்துக்கு நியமிக்கப் பட்டுள்ளனர் என்று மாகாணப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (து-இ)

### தவறிழைத்தோரை....

போன்று இந்த விவகாரத்தில் தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதனை ஜனாதிபதி வரைக்குமாவது எடுத்துச்சென்று செய்து முடிப்பேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

சுன்னாகம் தபால் நிலையக் கட்டடம் முழுமைப்படுத்தப்படாமல் அரைகுறை நிலைமையில் உள்ளது. இந்தத் திட்டத்தில் இடம்பெற்ற தவறுகள், மோசடிகள் தொடர்பில் 'உதயன்' வெளிப்படுத்தியிருந்தது. இந்த நிலையில் மேற்படி திட்டத்துக்கு நிதி ஒதுக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்ததாவது:

உடுவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக எனது தந்தையார் இருந்த போது சுன்னாகம் பகுதி மக்கள் தமக்குத் தபால் நிலையம் ஒன்று தேவை என்பதற்காக பணம் சேர்த்து காணியை வாங்கினார்கள். அவர்களது தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சுன்னாகம் தபால் நிலையம் அமைப்பதற்கு நல்லாட்சி அரசின் காலத்தில் மிகுந்த பிரயத்தனப்பட்டு அமைச்சர் மனோகணேசனின் அமைச்சு ஊடாக நிதி ஒதுக்கீடு செய்தேன்.

திட்டம் தொடர்பில் மேற்பார்வை செய்துகொண்டிருந்தேன். எனக்கு ஒவ்வொரு தடவையும் நிதி வரவில்லை, நிதி போதாது என்று அதிகாரிகள் கூறிக்கொண்டிருந்தார்கள். அதனை நான் உண்மை என்று நம்பியிருந்தேன். ஆனால் இப்போதுதான் உண்மை நிலை தெரிகின்றது.

இந்தத் திட்டத்தை அதிகாரிகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்த தவறிவிட்டார்கள். நிர்வாகத் தவறிழைப்பு, நிதி மோசடி, ஊழல் என்பன இடம்பெற்றிருக்கின்றன.

இந்தக் கட்டடத்தை விரைந்து முழுமைப்படுத்தி மக்கள் பாவனைக்கு வழங்க வேண்டும். அத்துடன் தவறிழைத்த அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். இதற்காக அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி வரைக்கும் செல்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன், - என்றார். (ஒ-5)

### சுமந்திரனுக்கு...

எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்கள் யாழ்ப்பாணம் குருநகரில் கறுப்புக்கொடி போராட்டம் நடத்தினர். அதன்போது சுமந்திரனின் கொடும்பாவியும் தீ வைத்து கொளுத்தி எரிக்கப்பட்டது.

குருநகர் மற்றும் வல்வெட்டித்துறை பகுதிகளின் கடற்றொழிலாளர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை நேற்றுக்காலை நடத்தினர்.

உள்ளூர் இழுவைப் படகு தொழிலில் ஈடுபடுவோர் அமைச்சர் ஒருவருக்கு தினமும் 5 ஆயிரம் ரூபா கப்பம் செலுத்துகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார் என்றுகூறிய மீனவர்கள், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது குருநகர் பகுதியில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன.

குருநகர் பகுதியிலுள்ள அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்தன. சுமந்திரனின் கொடும்பாவியும் காட்சிப்படுத்தப்பட்டு பின்னர் தீ வைத்து கொளுத்தி எரிக்கப்பட்டது. (து-20)

### இழுவைமடித்...

கின்றார். இறுதிவரை அவருடைய நினைப்பு கனவாகவே போகும்.

இவ்வாறு, வல்வெட்டித்துறை கிழக்கு கடற்றொழிலாளர் சங்கத்தினர் கூட்டாகக் கேள்வியெழுப்பினர். யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் கடற்றொழில் அமைச்சருக்கு 5 ஆயிரம் ரூபா இலஞ்சம் கொடுக்கின்றோம் என்று, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் புரளியைக் கிளப்பியிருக்கிறார்.

அது சம்பந்தமாக நாங்கள் குருநகர் தொழிலாளர்களுடன் இணைந்து இன்று (நேற்று) பெரும் போராட்டத்தை நடத்தியிருக்கிறோம்.

உங்கள் அரசியலில் எங்களை பகடைக் காய்களாகப் பயன்படுத்தக்கூடாது. நாங்கள் பிச்சை எடுக்கும் அளவுக்கு எத்தனையோமுறை கடற்றொழில் அமைச்சரின் வாசஸ்தலத்துக்குச் சென்றே இந்த தொழிலைச் செய்ய அனுமதி பெற்றோம். நாரா நிறுவனம் ஆய்வு செய்த பகுதியில்தான் நமது தொழிலை மேற்கொண்டு வருகின்றோம்.

6 மாதத்தில் 20 கோடி ரூபாவை நாட்டுக்கு ஈட்டிக்கொடுக்கின்றோம்.

அமைச்சர் தன்னுடைய வேலையை உரியவாறு செய்தால் அவருக்கு இலஞ்சம் கொடுக்க வேண்டிய தேவை எமக்கில்லை. அரசியல் கட்சிகளுக்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ நாங்கள் எதிரானவர்கள் அல்லர். ஒருவர் மாத்திரமே எதிராகச் செயற்பட்டு வருகின்றார்.

கடல்வளத்தையும் மீன்வளங்களையும் பாதுகாத்தே நாங்கள் இந்தத் தொழிலைச் செய்கின்றோம். மீன் இனப்பெருக்க காலப்பகுதிகளில் நாங்கள் இந்த தொழிலை செய்வதில்லை. வருங்கால சந்ததிகளும் இதனைப் பயன்படுத்துவதற்காகவே அவ்வாறு செய்து வருகின்றோம். இவர்களுக்கு மாற்றுத் தொழில் கொடுக்க வேண்டும் எனப் பலரும் கேட்கின்றனர். நாம் துறைமுகத்தை அமைத்து தருமாறு கேட்டிருந்தோம். ஆனால் அதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. - என்று தெரிவித்தனர். (து-20)

© 2000 Agfa-Gevaert N.V.

# மேற்கிந்தியத் தீவுகளை வென்றது தெ.ஆபிரிக்கா




டுபாய், ஒக். 27

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியது தென்னாபிரிக்கா அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 இலக்குகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக லூயிஸ் 56 ஓட்டங்களைப் பெற்றார். பொலார்ட் 26 ஓட்டங்களைப் பெற்றார். சிம்மன்ஸ் 35 பந்துகளில் வெறும் 16 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். மிக மந்தமாக அவரின் ஆட்டம் அமைந்தது. சிம்மன்ஸின் துடுப்பு மட்டையில் பந்துபடுவதே ஒரு கட்டத்தில் பெரும்பாடு என்றாகிவிட்டது. மேற்கிந்தியத் தீவுகளின் தோல்விக்கு சிம்மன்ஸ் முதன்மைக் காரணமென்றால் அதில் மாற்றுக் கருத்தில்லை.

பந்துவீச்சில் பிறிட்டோரியஸ் 3 இலக்குகளையும், கேசவ் மகாராஜ் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரரான பவுமா வெறும் 2 ஓட்டங்களுடன் ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார். ஹென்றிக்ஸ் 30 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பெற்றார். வான்டெர் டஸன் மந்தமான கதியில் விளையாடினார். இதனால் தென்னாபிரிக்கா அணி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. எனினும், அதிடியைக் கையிலெடுத்த எய்டன் மார்க்ரம் 26 பந்துகளில் 51 ஓட்டங்களைக் குவிக்க கடைசியில் பதற்றமற்ற வெற்றியைப் பெற்றது தென்னாபிரிக்கா. (ம)


## வீடு வாடகைக்கு

வவுனியா நெளுக்குளம் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

**071 484 1069**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று பணிபுரிய பணிப்பெண் தேவை. 35 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**077 410 2724**

## வீடு விற்பனைக்கு

இருபாலை கிழக்கில் 3 பரப்புக்கு 2 குழி குறைவான காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

**தொடர்பு 074 012 4574**

## வீடு காணி விற்பனைக்கு

கோப்பாய் இராச வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும் மற்றும் நீர்வேலி சந்திக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில் 5 1/2 பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 077 193 3490**

## பணியாளர் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல
**நகை காட்சி அறைக்கு**
**ஆண் / பெண்** பணியாளர்கள் தேவை. (அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
**021 222 2863,077 618 3302**

## பதவி வெற்றிடம்

நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர்
பாடசாலை, கைதடி

**1. பதவி**

சமையலாளர் (ஆண்/பெண்)
வயதெல்லை : 20 - 55
விடுதியில் தங்கியிருந்து வேலை செய்தல் வேண்டும்.
**சம்பளம் :** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

- ஆர்வம் உடையவர்கள் 26.10.2021 முதல் 09.11.2021 வரையான நாட்களில் மு.ப 9.00 - பி.ப 3.00 மணிக்குள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் விலாசத்திற்கு தங்களிடமிருக்கும் ஆவணங்களுடன் நேரடியாக சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**முகவரி :** நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை,
A9 வீதி, கைதடி தொ.பே.இல: **021-2232202, 0772527256**

**அதிபர்.**
**நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி.**


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 . 06 . 1945



மறைவு 27 . 09 . 2021

### அமரர் சிவகுரு அரியரத்தினம்

உங்கள் உயிர் எங்களை விட்டுச் சென்றாலும்
என்றும் நீங்கள் எங்களுடன் தான் இருக்கின்றீர்கள்
எத்தனை பிறவிகள் எடுத்தாலும் நீங்கள்
எங்களுடனேயே வாழ வேண்டி நிற்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வீரகத்தி விநாயகனின் பாதங்களை வேண்டுகின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல் Rip Book மற்றும் பனர் ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கற்குளி வடக்கு
கல்வயல், சாவகச்சேரி.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மலர்வு 05 . 03 . 1942



உதிர்வு 26 . 10 . 2021

### கந்தையா பூதத்தம்பி

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பூதத்தம்பி அவர்கள் நேற்று (26.10.2021) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சேதுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், இராசேந்திரம், வியாழம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும், கனகமுத்து அவர்களின் அன்பு கணவனும், வேலாயுதப்பிள்ளை, முத்துலிங்கம். கனகம்மா, தெய்வானப்பிள்ளை, நவமணி ஆகியோரின் அன்பு சகோதரனும், சுதர்சன், கௌரி, சுதாதர்சினி (லண்டன்), சுகிர்தா (லண்டன்), ரோகினி (லண்டன்), சுதாகரன், சுகிர்தன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2021) புதன் கிழமை நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொ.பே.இல :**
**077 245 5015, 077 719 4785**

**தகவல்**
**குடும்பத்தினர்**



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.